FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364127

1. District : சிவகங்கை PS: மா.தி.கு.மாவ Year: 2026 FIR No.: 08/2026 Date: 15.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended by the P.C (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 13.07.2026 Date to : 14.07.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 14.00 hrs Time to : 07.00 hrs & 12.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 15.07.2026 Time : 09.15 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 15-07-2026 Time : 09.45 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : அலுத்த மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சிவகங்கை மாவட்ட அலுவலகம், காரையார் காலனி சுமார் 20 கி.மீ தெற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கு. சிவகுமார் (b) Father's/ Husband's Name : கு. நாகலாங்கம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth 40/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ஜெராக்ஸ் மிஷின் சர்வீஸ் (g) Address : க.எண் 3421, இந்து நகர், காரையார் காலனி, சிவகங்கை மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி ஜெயராணி, M.S (Mukhya Sevika), சிவகங்கை மாவட்ட அலுவலகம், காரையார் காலனி மட்டாரும்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant: சிவகங்கை மாவட்டம்
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— ஏதுமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
- முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 15.07.2026ம் தேதி காலை 09.15 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில், மூர்த்தி நகர், கதவு எண். 3421, என்ற முகவரியில் வசிக்கும் திரு.திருநாகலிங்கம் என்பவரின் மகன் திரு.சிவா ஆனந்த் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வான புகார் மனுவை பெற்று, ரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக M.S. (Mukhya Sevika) திருமதி. ஜெயராணி ஆகியோரை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவர்களின் நடத்தை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து, அன்னாரின் அனுமதி பெற்று 15.07.2026ம் தேதி காலை 09.45 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 08/2026 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018ன்படி வழக்கு பதிவு செய்தேன்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

15/7/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

A. Kannan
INSPECTOR
15/7/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
- நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.07.2026 at 10.30 hrs.

Name: பெயர் .... A. KANNAN
Rank: நிலை .... INSPECTOR OF POLICE,
VAC, SIVAGANGAI

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண். 08/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, **அனுப்புநர்:** தி. சிவா ஆனந்த், த/பெ.திருநாகலிங்கம், க.எண். 3421, மூர்த்தி நகர், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம். **பெறுநர் :** காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் ஜெராக்ஸ் மெஷின் சர்வீஸ் வேலை செய்து வருகின்றேன். எனது மனைவி பெயர் திருமதி.சாந்தினி ஆகும். எங்களுக்கு சிவானி ஸ்ரீ மற்றும் ஷர்வானி ஸ்ரீ ஆகிய 2 பெண் பிள்ளைகள் மட்டும் உள்ளனர். எனது மனைவி கடந்த 30.01.2024ம் தேதி அன்று குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டார். கடந்த 13.07.2026ம் தேதி நானும், எனது மனைவியும் காளையார்கோவில் பேருந்து நிலையம் அருகே உள்ள கோகுலம் மெடிக்கல்ஸ் அருகில் உள்ள இ-சேவை மையம் சென்று முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் (Chief Minister Girl Child Protection Scheme -II) எங்களது மகள்களுக்கு உதவித்தொகை பெறுவதற்கு எனது மனைவி பெயரில் ஆன்லைனில் விண்ணப்பித்தோம். மேற்படி விண்ணப்பத்துடன் எனது மனைவிக்கு குடும்ப கட்டுப்பாடு அறுவைச்சிகிச்சை செய்ததற்கான சான்றிதழ், ஆண் குழந்தை இன்மை சான்றிதழ், எனது மனைவியின் வகுப்புச் சான்றிதழ், பிறப்பிடச் சான்றிதழ், மாற்றுச்சான்றிதழ், ஆதார் அடையாள அட்டை, வருமான சான்றிதழ் மற்றும் எனது மகள் சிவானி ஸ்ரீ-யின் பிறப்புச்சான்றிதழ் ஆகியவற்றை இ-சேவை மையத்தில் Scan செய்து பதிவேற்றம் செய்து, விண்ணப்பித்ததற்கான ரசீது எண்.TN-303202671338811 8-யை கொடுத்தார்கள். அதன் பின்னர் அன்றைய தினம் மதியம் சுமார் 2 மணியளவில் நானும் எனது மனைவியும், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள், குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த MS திருமதி.ஜெயராணி என்பவரை சந்தித்து, எனது 2 பெண் குழந்தைகளுக்கு Chief Minister Girl Child Protection Scheme -II-வில் உதவித்தொகை பெற வேண்டி இ-சேவை மையத்தில் விண்ணப்பித்துள்ளதாக கூறினேன். அதற்கு அவர், என்னிடமிருந்த சான்றிதழ்களின் நகல்களை வாங்கி வைத்துக்கொண்டு, "எல்லாம் சரியாக உள்ளது, file ரெடி பண்ணி, உதவித்தொகைக்கு recommend செஞ்சு, மேல அனுப்பி எல்லா ஏற்பாடும் நானே செய்து தருகிறேன், எனக்கு ரூ.200ஃ- கொடுத்திடுங்க" என்று கேட்டார். நான் அவரிடம் விபரம் கேட்டுட்டு போகத்தான் வந்தோம், பணம் எதுவும் கொண்டுவரல, அப்புறம் வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பின்னர், நேற்று 14.07.2026ம் தேதி காலை சுமார் 7 மணியளவில் திருமதி.ஜெயராணி அவர்கள் அவரது அலைபேசி எண்.6383580472-லிருந்து எனது மனைவியின் அலைபேசி எண்.7904607174-ல் தொடர்புகொண்டு, "நான் MS பேசுகிறேன், பணம் கொண்டு வர்றேனு சொன்னீங்களே, நேற்று சாயங்காலம் வரலையே" என்று எனது மனைவியிடம் கூறியுள்ளார். எனது மனைவி ஜெயராணியிடம், எனது கணவரிடம் போனை கொடுக்கிறேன், அவரிடம் பேசிக்கொள்ளுங்கள் என்று சொல்லி, அருகிலிருந்த என்னிடம் போனை கொடுத்தார்.

நான் போனை வாங்கி பேச முயன்றபோது, call cut ஆகிவிட்டது. நான் மறுபடியும் எனது மனைவியின் அலைபேசி எண்ணிலிருந்து MS திருமதி.ஜெயராணி அவர்களை தொடர்புகொண்டபோது, திருமதி.ஜெயராணி என்னிடம், "என்னாச்சு, பணம் இன்னும் கொண்டு வராம இருக்கீங்க, பணம் கொடுத்தால்தான் file ரெடியாகும்" என்று சொன்னார், அதற்கு நான் அவரிடம் 11 மணிக்கு மேல வந்து பார்க்கிறேன் என்று சொன்னேன். அதன்படி நேற்று மதியம் சுமார் 12 மணியளவில் மீண்டும் நான் எனது மனைவியுடன் மேற்படி அலுவலகத்திற்கு சென்று, MS திருமதி.ஜெயராணியை சந்தித்தபோது, அவர் என்னிடம், "உங்க file-யை ready பண்ணி அனுப்பிவிடுகிறேன், கேட்ட பணம் கொண்டு வந்திட்டீங்களா?" என்று கேட்டார். நான் அவரிடம், "பணம் ரூ.2000/- ரொம்ப அதிகம், அதுவும் இல்லாமல் எனது மகள்களின் பெயரில் FD ஆகத்தான் Government-ல் கொடுப்பார்கள், கையில எதுவும் பணமாக கிடைக்காது, நானே ரொம்ப கஷ்டத்தில் இருக்கிறேன், பார்த்து பண்ணுங்க மேடம்" என்று சொன்னேன். அதற்கு அவர், சரி ரூ.1000/-த்தை நாளை கொடுத்திடுங்க, இதுக்கு மேல குறைக்க முடியாது, பணத்தை கொடுத்திட்டீங்கண்ணா நான் file-யை ரெடி பண்ணிட்டு, எல்லாத்தையும் follow பண்ணி உங்களுக்கு உதவித்தொகை கிடைக்க ஏற்பாடு பண்றேன்" என்று கூறினார். நான் அவரிடம், பணம் கையில இல்லை, நாளைக்கு வந்து பார்ப்பதாக தெரிவித்துவிட்டு அங்கிருந்து எனது மனைவியுடன் வந்துவிட்டேன். நானும் எனது மனைவியும் இது சம்மந்தமாக கலந்து பேசி லஞ்சம் எதுவும் கொடுக்கக்கூடாது என முடிவு செய்தோம். எனது மனைவி குழந்தையை பார்த்துக்கொள்ள வேண்டியிருப்பதால் அவர் என்னிடம், இது சம்மந்தமாக சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ, அதன்படி செய்யுங்கள் என்று கூறிவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. என்னிடம் எனது மகள்களுக்கு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில் அரசு வழங்கும் உதவித்தொகை கோரிய விண்ணப்பம் தொடர்பான வேலைகளை செய்து கொடுப்பதற்கு லஞ்சமாக பணம் ரூ.1000/- கேட்கும் MS திருமதி.ஜெயராணி என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் T.சிவாஆனந்த். இணைப்பு: 1) Chief Minister Girl Child Protection Scheme -II விண்ணப்ப ரசீதின் நகல், 2) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட மேற்படி சான்றிதழ்களின் நகல்கள்.

Sir, Received the complaint on 15.07.2026 at 09.15 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated and obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime No. 08/2026 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption

(Amendment) Act, 2018 on 15.07.2026 at 09.45 hrs and took up for investigation. Sd. A.Kannan, Inspr/V&AC, 15.07.2026.

இந்த வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு மற்றும் இணைப்பு ஆவணங்கள் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A. Kannan
DSP/V&AC
15/7/2026
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Sivaganga